III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S. NO.34/2014

Deposition of witness for the Defendant/DW1
Respondent solemnly by Tmt.R.Santhi, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 17-10-2019

Name :Sivakumar Caste :

Father's/Husband's Name:Bakthavatchalu Calling :

Age : Religion :

Village : Taluk:

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை- நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் பத்தி 29ல் சுப்பையா நாயுடுவின் 4 மகன்களும் 1969 ஆண்டு முதல் வருமான வரி செலுத்தி வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு ஆதாரமாக ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் எல்லா வருடத்திற்குண்டான வருமான வரி தாக்கல் செய்யவில்லை ஒரு சில வருடத்திற்குண்டான வருமான வரி ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1969ம் ஆண்டுக்குண்டான வருமான வரி கணக்கு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கில் கண்டுள்ள எந்த சொத்துக்களும் என்னுடைய தகப்பனார் தன்னுடைய சொந்த வருவாய் கொண்டு வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொத்துக்கள் வாங்குவதற்கு என் தகப்பனாருக்கு வருவாய் இருந்தது என்று காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தவறாகும். ஆரம்பத்தில் ஏ செட்யூலில் கண்டுள்ள அயனம்பாக்கம் கிராம சொத்துக்களின் மூலம் கிடைத்த வருவாயின் அடிப்படையில பி, சி, டி, இ, எப், ஜி இன சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று சொன்னால் தவறாகும். 1முதல் 3 பிரதிவாதிகளுக்கு எந்த சொத்திலிருந்து வாடகை கிடைத்துக் கொண்டு வருகிறது என்றால் எனக்கு தெரியாது. எவ்வளவு வாடகை வாங்குகிறார்கள் என்று தெரியாது. அதேபோல் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எந்தெந்த சொத்திலிருந்து எவ்வளவு வாடகை கிடைக்கிறது என்றால் ஷெட்யூல் சி அயிட்டம் எண் 3 கோலடியில் உள்ள கிராமத்தில் உள்ள சொத்திலிருந்து வருமானம் கிடைக்கிறது மாதம் தோராமையாக ரூ.1 இலட்சம் கிடைக்கிறது 7 முதல் 9 பிரதிவாதிகளுக்கு எந்த சொத்திலிருந்து எவ்வளவு வருமானம் வருகிறது என்றால் எனக்கு தெரிந்த வரை சி ஷெட்யூல் அயிட்டம் எண் 1, 2 ஆகிய சொத்துக்களிலிருந்து வருகிறது எவ்வளவு வருமானம் வருகிறது என்று தெரியாது. 10ம் பிரதிவாதி வனஜாவிற்கு வாடகை வருமானம் ஏதாவது கிடைக்கிறதா என்றால் தெரியாது. வாதிகளுக்கு எந்த சொத்திலிருந்த எவ்வளவு வாடகை வருமானம் கிடைக்கிறது என்று தெரியுமா என்றால் தெரியாது. தற்மசயம் வாதிகளுக்கு எந்த சொத்திலிருந்தும் எந்த வாடகை வருமானம் கிடைப்பதில்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. அந்த விவரம் எனக்கு தெரியும் என்றாலும் தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றாலும் தவறாகும். விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தின்

பெயரில் எந்த ஒரு வருமான வரி கணக்கையும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் தவறாகும். கோலடியில் உள்ள சி ஷெட்யூல் சொத்து வாங்கிய போது எனக்கு என்ன வயது என்றால் 2 வயதாகும். வேப்பன்சாவடியில் சுப்பையாநாயுடு வீடு வாங்கியிருந்தார் என்றாலும் அந்த இடமானது சாலை அகலப்படுத்துவதற்காக கையகப்படுத்தப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 2006ம் வருடம் அரசாங்கம் கையகப்படுத்தியதால் அதற்குண்டான இழப்பீடு தொகை கொடுத்தார்கள் என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய தகப்பனாருக்கு எந்த தொழிலும் கிடையாது என்றாலும் விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்தின் மூலமாக மாதா மாதம் சுப்பையா நாயுடு என்னுடைய தகப்பனாருக்கு மாதம் ரூ.300/- கை செலவிற்கு வழங்கி வந்தார் என்றாலும் அதேபோல் மற்ற 3 பிள்ளைகளுக்கும் மாதா மாதம் தலா ரூ.300/- வழங்கிவந்தார் என்றாலும் மொத்த குடும்ப செலவுகளையும் சுப்பையாநாயுடு ஏற்றுக் கொண்டார் என்றாலும் பேரன், பேத்திகளை எல்லோரையும் அவருடைய சொந்த செலவில் படிக்க வைத்தார் என்றாலும் ஆக ஏக குடும்ப வருவாய் கொண்டு ஏற்படுத்தப்பட்ட சொத்துக்கள் என்றாலும் வாதிகளுக்கு 5ல் 1 பாகம் உண்டு என்றாலும் அது முழுவதும் தவறாகும். தாவாவில் கண்டுள்ள எந்த சொத்தையும் சுப்பையநாயுடுவின் மகன்கள் யாரும் தன் சொந்த வருவாயை கொண்டு வாங்கவில்லை என்று சொன்னால் முழுவதும் தவறாகும். 12ம் பிரதிவாதி வாடகை தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அவர் சுவாதீனத்தை ஒப்படைத்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். ஆகையால் வாதிகள் கோரியபடி தாவா சொத்தில் 5ல் 1 பங்கு 2 வாதிகளுக்கும் சேர்ந்து முதல் நிலை தீர்ப்பாணை செலவு தொகையுடன் பிறப்பிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ம.வி. இல்லை